International Journal for Multidisciplinary Research (IJFMR)
E-ISSN: 2582-2160 ● Website: www.ijfmr.com ● Email: editor@ijfmr.com

ஆசாரக்கோவை விளம்பும் வாழ்வியல் விழுமியங்கள்

Prof. Dr. Tamilselvi M[1], Prof. Dr. vijayalakshmi K[2], Ms. Akila S[3], Dr. A. Sharmila[4]

[1,2,3,4]Assistant Professor, Department of Tamil, Shrimati Indira Gandhi College,Trichy-2

ஆய்வுச் சுருக்கம்:

ஆசாரக்கோவை என்பது தமிழ் இலக்கியத்தின் பதினெட்டு நூல் தொகுப்பைச் சேர்ந்த ஒரு போதனை இயல்புடைய கவிதைப் படைப்பாகும். இந்த புத்தகம் மனிதன் பிறப்பு முதல் இறப்பு வரை நல்ல முறையில் வாழ வழிகாட்டுகிறது. ஆரிடம் என்ற புத்தகத்தைத் தழுவி, எழுத்தாளர் இந்த புத்தகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். இந்த புத்தகம் வெண்பா பாணியில் எழுதப்பட்டுள்ளது மற்றும் இது ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது. இந்த புத்தகத்தின் ஆசிரியர் கயத்தூர் முள்ளியார். ஆசாரம் என்பது மக்கள் வாழ்க்கையில் பின்பற்றும் ஒழுக்கத் தரங்களைக் குறிக்கிறது. இந்த புத்தகம் உலகில் உள்ள அனைத்து மக்களும் வாழ்க்கையில் பின்பற்ற வேண்டிய ஒழுக்கத் தரங்களை அறிய முடியும் என்ற கருத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுரை ஆசாரக்கோவையில் நிலவும் ஒழுக்கத்தின் மதிப்புகளை ஆராய்கிறது.

இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆசாரக்கோவை மூலம் வாழ்வியல் விழுமியங்களை எடுத்துரைக்கிறது.

குறிச்சொற்கள்: பொங்கு-செல்வச் செழிப்பு, ஒண்பொருள்-சிறந்தபொருள்,தக்கார்-மேன் மக்கள், வல்லானை-வலிமையானவன், நற்றமினார்-நல்லொழுக்கம்

முன்னுரை

மனித வாழ்வில்; தூய்மையைக் கடைப்பிடிக்க வேண்டிய அறங்களை அறிவுறுத்தும் அற்புத நூல்களுள் ஆசாரக்கோவையும் ஒன்றாகும். அது மனிதனுக்கு நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுக்கின்ற கருத்துப் பெட்டகம் என்றே கூறலாம். பொதுவாகவே, வாழ்வியல் நெறிமுறைகளைப் பின்பற்றுவதில் மட்டுமல்லாமல் அதன் விழுமியங்களை அறிந்து கொள்வதிலும் காலந்தோறும் மக்கள் அதிக இடர்ப்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர். இவ்வாறான சூழலிலிருந்து மக்களை விடுவித்து இவ்வுலக வாழ்விற்கும் மறு உலக வாழ்விற்கும் வழிகாட்டும் நல்ல கலங்கரை விளக்காய் அமையும். இந்நூலின் கருத்துகளை, வாழ்வியல் நெறிமுறைகளை வழக்கமாக்கிக் கொண்டு அதனைப் பின்பற்றுபவர்களே வாழ்வை வெல்கிறார்;கள் என்பது திண்ணமாகும்.

மனிதர்கள் எப்போதும் தொடர்ந்து அகத்தையும், புறத்தையும் நாளுக்கு நாள் புத்தாக்கம் செய்து கொண்டே வந்தால்தான்; அவர்களது ஆழ் மன எண்ணங்கள், சிந்தனைகள், செயல்கள் யாவும் பொலிவுபெறும். ஆகையினால் மட்டுமே வாழ்வியல் சூழலும் வலுப்பெறும். ஆனால், அவ்வாறு இல்லாமல் அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சியில் பீடிக்கப்பட்டுள்ள மக்கள் பெரும்பாலும் மருத்துவமனையைத்இ தங்கள் வாழ்விடமாக மாற்றி வருகின்றனர். மேலுமஇ; அவர்கள் தங்கள் உடல் நலனி;ல் அக்கறையற்று செல்வத்தின் மீதே அதிக நாட்டம் உடையவர்களாக வாழ்ந்து வாழ்க்கையைத் தொலைத்தும் வருகின்றனர்.

மாந்தர்கள் மேற் கிளையில் அமர்ந்து கொண்டு அடிமரத்தை வெட்டுகின்ற அதிபுத்திசாலியாகவே தங்களின் எண்ணங்களைக் கொண்டுள்ளனர். இதனால் தனிமனித வாழ்வில், குடும்பத்தில்;உலகியலில் ஆகிய முப்பகுப்பிலும் பெரும் போராட்டத்தை எதிர்கொண்டு வருகின்றனர். எனவே, இச்சூழலில் இருந்து விடுபட வேண்டுமெனில், மாந்தர்கள் ஒவ்வொருவரும் நல்ல மன ஆரோக்கியத்தைப் பெற, நன்கு திட்டமிட்டுச் செயலாற்ற வேண்டும். அப்போதுதான் நாம் வெற்றியை நோக்கி வீறு நடையிட முடியும்.

பொறுமையால் விளைவதே பெருமை

அகல்வாரைத் தாங்கும் நிலம் போல பொறுமையைக் கடைப்பிடித்தால் மட்டுமே இவ்வுலக வாழ்விலும்; மறுவுலக வாழ்விலும் அதிக பலனைப் பெற முடியும். தீமை செய்து பாடுபடுவதைப் பார்க்கிலும், நன்மை செய்து பாடுபடுவதே அதிக நன்மையை ஈட்டித் தரும் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. மேலுமஇ; ஒரு மனிதனின் பெருமைக்கும் சிறுமைக்கும் காரணமாவது அவனுடைய நடத்தையே ஆகும்.

“பகைவனுக்குக் கருள்வாய் நன்னெஞ்சே”;

- பாரதியார் கவிதைகள்-1

தன்னைப் பகையாக எண்ணித் தீங்கு செய்பவருக்கும் நன்மை செய்யும் மனம் பெற்றிருப்பின் சாலச் சிறந்ததாகும். இப்பக்குவக் குணம் உடனே வந்துவிடாது. அற நூல் தொடர்பின் பழக்கத்திலிருந்தே மலரும்;. ஆகையினால் நன்மை செய்வோருக்கே நன்மை செய்வதினால் எந்தப் பயனும் இல்லை. தீமை செய்வோருக்கும் நன்மை செய்வதே சிறந்த அறச் செயலாகும்.

இதனையே திருக்குறளும் இன்னல் செய்தவருக்கு நன்மை செய்வதே சால்பு என வலியுறுத்திக் கூறியுள்ளார் வள்ளுவப் பெருந்தகை

“இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்தோ சால்பு”

- திருக்குறள், கு.எண்.314.

‘பொறுமை கடலினும் பெரிது’ என்ற வாக்கியத்திற்கு ஏற்ப நம்முடைய அன்றாட வாழ்வில் உணர்வுகளை ஒடுக்கும்போதும் இனிமையை மனத்தில் பதிய வைக்கும்போதும் இயல்பாகப் பொறுமை வரக்கூடும். தொடர்ந்து நேர்மறைச் சிந்தைக்குரிய பயிற்சி எடுத்துக் கொள்ளும் நிலையில் நம்மை நாம் உணரவும் வெற்றியாளராக உருவெடுக்கவும் முடியும். மேலும் பிறரிடம் இனிமையோடும்; இணக்கத்தோடும் நடந்து கொள்ளும்போது மகிழ்ச்சி ஏற்படும். இதனையே வள்ளுவர் நிறையுடைமை வேண்டுமாயின் பொறையுடைமைக் கடைபிடித்தல் சாலப் பொறுத்தமாகும் என்கிறார். அதோடு மட்டுமின்றி ஒருவர் அளவுக்கு அதிகமாகத் தீங்கு செய்த போதிலும் அதனைப் பொறுத்துக்கொண்டு அதனை நினைக்காமல் மறத்தலே அதிக நன்மை அளிக்கும் என்பதனை வள்ளுவா;

“பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று”.

- **திருக்குறள். கு.எண்.152.**

ஏன்று கூறுகிறார். ஆகையினாலே பொறுத்தார் பூமியாழ்வார் என்ற பதம் உலகியல் வழக்காகி இருக்கிறது. மேலும், மகாபாரதம் என்ற இதிகாச நூலில் இடம் பெற்றிருக்கின்ற தருமர் என்ற கதாபாத்திரம் மட்டும் பொறுமையினால் வென்ற பாத்திரமாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறார். ‘**பகைவர்க்கு அருள்வாய் நன்நெஞ்சே**’ என்ற பாரதியின் கூற்றுப்படி நம்மை வெறுக்கும் பகைக்கும் மாந்தர்களுக்கும் உதவும் உள்ளமே கடவுளின் அற நெறியாகும். அதனையே ‘தீமைக்கு நன்மை செய்’ என்று வேதாகமம் எடுத்துரைக்கிறது.

மேலும் ‘**இன்னா செய்தார்க்கும் இனியவை செய்தலே**’ மனித பிறப்பின் மகத்துவம் ஆகும். இதனை மனத்தில் நிறுத்தி நாளும் கடைபிடித்தாலே வாழ்வானது இனிமை பயக்கும். சீவகசிந்தாமணி எனும் சமண காப்பியத்தில் கூட கட்டியங்காரன் சீவகனின் நாட்டைக் கைப்பற்றிய வேளையிலும் சீவகன் மதி நுட்பமான சிறந்த திட்டத்தினாலும் சமயோசித புத்தியினாலும், அறிவுக் கூர்மையாலும் பொறுமையோடே காத்திருந்து நாட்டைக் கைப்பற்றினான். இக்கருத்தை வலியுறுத்தும் விதமாக ஆசாரக்கோவை கீழ்க்காணுமாறு இவ்வாறு குறிப்பிடுகின்ற

“பொறையுடைமை இன்சொல்லோடு இன்னாத
எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியொடு”.

- **ஆசாரக்கோவை,பா.எண்.1**

என்ற ஆசாரக்கோவை பாடல் வாழ்விற்குத் தேவையானப் பண்புகளை நயம்பட உரைக்கிறது. நாம் பிறரிடம் பேசும்போது கடுமையான சொற்களைத் தவிர்த்து இனிமையோடு பேசுதல் நல்லறமாகும் என்று பெருவாயின் முள்ளியார் விளம்புகிறார். இதனையே ஔவையார் “நயம்பட உரைத்தல்” என்று குறிப்பிடுகிறார். ஆகவே ஒருவர் வாழும் போதே மறுமைக்கான பலனைப் பொறுமையினால் மட்டுமே பெற இயலும் என்ற அறத்தை மிகவும் ஆணித்தனமாக விதைத்திருக்கிறார்..

“பொறுமை எனும் நகையணிந்து பெருமை
கொள்ள வேண்டும்”;

ஔவையார் பாடல்,பா.எண்-55.

இக்கருத்தினை வலியுறத்தும் விதமாக சமண முனிவர்கள் நாலடியாரில் கீழ்வருமாறு பொறுமையைப் பற்றிச் சுட்டிக்காட்டுகின்றார்;.

“நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதிமற்று - ஓரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலம்
சமழ்மையாக் கொண்டு விடும”;.

- நாலடியாா; பாடல் எண்;.72.

நாலடியார் பாடலில் குறிப்பிட்டுள்ள கருத்தினை ஏற்றுக்கொள்ள கணக்கற்ற பயன்களை அடையமுடியும். நற்குணமில்லாதவர் பண்பற்ற சொற்களைச் சொல்லும்போது அச்சொற்களைப் பொறுத்துக் கொண்டிருப்பதே தகுதியாகும்! அவற்றைப் பொறுக்காமல் பதில் கூறினால், கடல் சூழ்ந்த உலகம் அதனைப் புகழுக்குரிய செயலாகக் கொள்ளாது; பழிக்குரிய செயலாகக் கருதும். ஆகவே பொறுமையோடு திகழ்வதன் மூலமே நாம் பெற எண்ணியதை பெற்றுக்கொள்ள இயலும்.

ஆன்றோர் வழியைப் பின்பற்றுதல்

‘நயம்பட உரை’ என்ற பதத்திற்கு ஏற்ப வாழும் நிலையில் சான்றோரின் வழியில் சென்று நம் பண்புகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். ஒருவர் தன் அன்றாட கடமைகளைச் சரிவர குறித்த காலத்தில்; செய்யும்போது தேவையற்ற பயம், மன வருத்தம், துன்பம் ஆகியவற்றிலிருந்து விடுபடலாம். மேலும், அன்றைய நாளில் ஆற்றவேண்டிய பணிகளைத் திட்டமிட்டு நெறிமுறைப்படி செய்வதால் மனமகிழ்ச்சியும், புத்துணர்ச்சியும், மனத்தில் கிட்டும் என்பதே கூடுதல் பலனாகும். இப்படி நுணுக்கமான திறன்களோடு வாழ்க்கையில் பயணிப்பவர்களே நிலையான வெற்றியை ஈட்ட முடியுமென்ற கருத்தை வலியுறுத்தும் விதமாக ஆசாரக்கோவை இவ்வாறு உரைக்கிறது.

“வைகறை யாமம் துயிலெழுந்து, தான்செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து, வாய்வதில்
தந்தையும் தாயும் தொழுதெழுக என்பதே
முந்தையோர் கண்ட முறை”.

- ஆசாரக்கோவை, பா.எண். 04.

அறக் கருத்துக்களை வலியுறுத்தும் விதமாகவும், பெற்றோருக்குக் கீழ்ப்படிந்து மனத்தால் மட்டுமல்ல உள்ளத்தாலும் வணங்;கித் தொழுதல் என்பதே சான்றோர்கள் கண்ட நெறிமுறைகளாகும். ஆகவேஇ பழமையான அறமுறைகளை மாறாமல் கைக்கெண்டு வாழ்வதுதான் வெற்றிக்கான வழியாகும்.

'பண்பெனப்படுவது பாடறிந்தொழுகல்'

- கலித்தொகை-133

பெரியோர்கள் பின்பற்றிய வழிமுறைகளைத் தவறாமல் செயல்படுத்த வேண்டும். தொடர்ந்து இழிவான காரியங்களை எப்போதும் செய்யாதவர்களே சான்றோர்; ஆவார். ஆனால் தற்காலத்திலோ மக்கள் ஆள் பாதி ஆடை பாதி என்று தன்னை மறந்த நிலையில் தங்;களை வெளிப்படுத்துகிறார்கள். இதனால் மக்கள் சமூகத்தில் நெறிபிறழ்ந்த அறத்திற்கு மாறான பலகேடுகள் நிறைந்த செயல்கள் செய்;து வருகின்றனர். மேலும்இ அதிகப் பூசல்களையும், சச்சரவுகளையும் ஏற்படுத்தி இயல்பற்ற வாழ்வியல் உழல்கிறார்கள்.

"அறிவைத் தானே பெருக்கச் சொன்னான்
ஆடையைத் தானா குறைக்கச் சொன்னான்"

ஆனால், ஆசாரக்கோவை படம்பிடித்துக் காட்டும் சான்றோர்கள் தங்களின் ஆடை விஷயத்தில்

கூட அதிக கவனத்தோடு செயல்படுவதாக இந்நூல் சுட்டிக்காட்டுகிறது. மேலும், நீராடும்போது கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகளையும் இந்நூல் வலியுறுத்தி கூறுகிறது. இதனை,

"உடுத்தலால் நீராடார் ஒன்றுடுத்து உண்ணார்
உடுத்தாடை நீருள்பிழியார் விழுத்தக்கார்
ஒன்றுடுத்து என்றும் அவைபுகார் என்பதே
முந்தையோர் கண்ட முறை."

- ஆசாரக்கோவை, பா.எண்.11.

ஒழுக்கநெறிகளைத் தவறாது கடைப்பிடித்தல் மனிதர்களின் மாற்றங்களில் தவறான மாற்றங்கள் நிகழாமல் இருக்க வழிவகுக்கும்.

சான்றோர் முன் நடக்கும் விதம்;

அறிவுடையோாஇ; சான்றோர் முன்பாக மிகவும் மரியாதையோடு நடந்துகொள்வர். மேலும்இ அவர்களிடம் வணங்கி, வாய்பேசாமல் அமைதியோடு செயல்படுவர். அதனைத் தவிர வேறெதுவும் கூற மாட்டார்கள். ஏனெனில,; வயதிலும், அறிவிலும்இ நிறைஇ ஆற்றல் கொண்டவர்களிடம் நற்பெயர் பெறும் விதமாகவே அறிவுடையோர் நடந்து கொள்வார்கள். இக்கருத்தினை வலியுறுத்தும் விதமாக ஆசாரக்கோவை இப்படி கூறுகிறது.

“தொழுதானும் வாய்;புதைத் தானும் அஃதன்றிப்
பெரியார்முன் யாதும் உரையார், பழியாகார்
நன்றுற நோக்கி உரை”

- ஆசாரக்கோவை, பா.எண்.97.

அறத்தின் நெறிமுறைகளை வாழ்வியல் நுணுக்கங்களை அனுபவத்தின் வாயிலாகச் சான்றோர்களே எடுத்துரைப்பர். ஆகவே, அவர்களிடம் நட்போடு பழக வேண்டும். அதுமட்டுமின்றி அச்சான்றோர்களின் பேராற்றல், மனத் திட்பம் ஆகிய எல்லா வகையிலும் வலிமையைச் சேர்க்கும் வண்ணமாக அமையும். இதனை குறள் வழியாக அறியலாம்.

“தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுகா வல்லானைச்
செற்றார் செயக்கிடந்தது இல்”.

- திருக்குறள்,பா.எண்.446.

என்பது வான்மறையாகும். தீங்கில்இ ஆபத்தில் காக்கும் அரணாகச் சான்றோர் திகழ்வர். மேலும்இ அவர்களைத் தமக்கு பலனாகக் கொண்டுஇ அவர் வழியைப் பின்பற்றும் போது எவ்வகையிலும பகையோஇ துன்பமோ நேரிடாது. ஆகையினால் வாழ்வில் மனமகிழ்ச்சியோடு செயல்பட முடியும் என்கிறார் திருவள்ளுவர்.

அன்றாட வாழ்வில் தவிர்க்க வேண்டிய பண்புகள்

அறிவுடைய சான்றோர் எந்நிலையிலும் பொய் கூறுதலோ, புறங்கூறுதலோ, பொறாமையோ, பிறரது பொருளைக் கவர்ந்து கொள்ளுதல் போன்ற இழிவான செயல்களையும்; செய்யமாட்டார்கள். ஏனெனில், இம்மையில் மட்டுமல்ல மறுமையிலும் இச்செயலால் பயன்கிட்டும் என்பதனை அறிந்துள்ளார்கள்.

ஆகையினாலே சான்றோர்கள் வறுமை வந்தபோதிலும் தன்னிலையில் இருந்து தாழாதும் இருப்பார்கள்.

“பொய்குறளை வெளவல் அழுக்காறு இவைநான்கும்
ஐயம்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பின்
ஐயம் புகுவித்து செற்றுவிடும்”;.

- ஆசாரக்கோவை, பா.எண்.38.

சங்க இலக்கியத்தில்; சான்றோர்களின் மேன்மையை, அவர்களின் குணத்தை,

“புகழெனின் உயிரும் கொடுக்குவர்;
பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்”

-புறநானூறு, பா.எண்,182.

என்று புறநானூறு உரைப்பதனைக் காணலாம். சான்றோர்கள் எப்போதும் நிறைவான பண்புகளைப் பெற்றவர்களாகத் திகழ்வர். மேலும் தான் இறந்தாலும் தன் செயல்பாட்டினால் கிடைத்த புகழே நிலைத்து நிற்கும் தன்மையைப் பெற்றிருப்பார்கள்.

விருந்தினரை உபசரித்தல்

தம் வீட்டிற்கு வருகின்ற விருந்தினரைப் புன்முறுவலுடன் இன்சொல் கூறி வரவேற்க வேண்டும். மேலும் அதோடு நிற்காது அவர்களின் களைப்பைப் போக்கும் விதமாக அருந்துவதற்கு சுவைநீர் அளிக்க வேண்டும். விருந்தினர் வீட்டிற்கு வந்ததிலிருந்து மீண்டும் செல்லும்வரை கவனமாக மிகுந்த அன்போடு விருந்தாற்ற வேண்டும் என்பதைஇ

“முறுவலி னிதுரை கால்நீர் மணைபாயக்;
கிடக்கையொடு இவ்வைந்தும் என்பதலைச் சென்றார்க்கு
ஊனொடு செய்யும் சிறப்பு”

- ஆசாரக்கோவை, பா.எண். 53.

என்ற வெண்பாவின் வாயிலாக அறிந்து கொள்ளலாம். இதனை அடியொட்டி திருவள்ளுவர் விருந்தோம்பல் என்ற அதிகாரதத்தின் வாயிலாகக் கருத்துக்களைப் பதிவிடுகிறார்.

“அகனமர்ந்து செய்யாள் உறையும்; முகன்அமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.“

- திருக்குறள்-84

தன் இல்லத்திற்கு வருகின்ற விருந்தினரை முகமலர்ச்சியோடு அன்புரையாடி அமுது அளித்தல் வேண்டும். அவ்வாறு செய்தால் திருமகளானவள் அவ்வீட்டில் நிலைத்திருப்பாள் என்பது உறுதியாகும் என்பர் குறள் மறையார் கூறுவார்.

“நற்றமினார் சேர்த்தபுகழ் காலத்தில் என்னவெனில்
உற்ற லிருந்தை உயிரென்று பெற்றுவத்தல்”
- குடும்ப விளக்கு,

என்று பாவேந்தர் குறிப்பிட்டுள்ளார்.

பாரதிதாசனின் குடும்ப விளக்கு என்ற நூலில் இடம்பெற்றுள்ள தங்கம் தன்னுடைய கணவன் மற்றும் மாமியார், மாமனார் ஆகியோருக்காக உணவினைப் பக்குவமாகத் தயாரித்து பரிமாறும் பண்பு பெற்றவளாகச் சித்தரிக்கப் பட்டிருக்கிறார். இக்கருத்தினை,

“கொண்டவர்க் கெது பிடிக்கும்
குழந்தைகள் எதை விரும்பும்
தண்டூன்றி நடக்கும் மாமன்
மாமிக்குத் தக்க தென்ன
உண்பதில் எவரு டம்புக்(கு)
எதுவுத வாதென் றெல்லாம்
கண்டனள், கறிகள் தோறும்
உண்பவர் தம்மைக் கண்டாள்!”

- **குடும்ப விளக்கு**

எவ்வுயிரும் தம் உயிர் போல் பேணும் பழக்கம் உடையவளாகவும் தனது குடும்பத்தின் மீது அக்கறை உடையவளாகவும் இல்லத் தலைவி தங்கம் காணப்படுகிறாள். எனவே அக்குடும்பத்தில்; வேற்றுமை நிலையே காணப்படுகிறது. மேலும் மனத்திற்குள் இணக்கமான நிலையும் மகிழ்ச்சியும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையினால் இன்றைய காலக்கட்டத்தில் வாழும் பெண்கள் தம் உள்ளத்தில் எவ்விதப் பாகுபாடு இன்றி ஒற்றுமையோடு வாழும் வாழ்வானது சிறக்கும் என்பது திண்ணமாகும்.; இதற்கு வலிமை சேர்க்கும் வண்ணமாக ஔவையார் தனது கொன்றை வேந்தன் என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

'மருந்தே யாயினும் விருந்தொடு உண்'

- கொன்றை வேந்தன்

மேலும்இ பத்துப்பாட்டு என்ற நூல் தொகுப்புகளில் ஒன்றான பெரும்பாணாற்றுப் படையில் கரிகாலப் பெருவளத்தான் என்பவன் தன் வீட்டிற்கு வருவோரை விருந்தளித்தே வழியனுப்ப ஏழு அடி அவர்களோடு நடந்து சென்று வழியனுப்புகின்ற முறையை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார். இதன் மூலம் விருந்தினருக்கு எவ்வளவு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருந்தது என்பது புலப்படும்.

ஆனால் இன்றைய புத்தாக்கக் காலக்கட்டத்தில் தன் இல்லில் உள்ளோருக்கு உணவு சமைப்பதே பெரிய போராட்டமாகப் பார்க்கப்படுகிறது. மேலும் இணைய வழியில் உணவினை வரவழைத்து உட்கொள்ளும் பாதுகாப்பற்ற நிலையும் பெருகி வருகிறது. இதனால் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமான பிணைப்பு அற்ற சூழ்நிலை உருவாகி வருகிறது எனலாம். ஆகையினால் நாம் தொடர்ந்து நம்முடைய பரம்பரைப் பண்பாட்டைப் பின்பற்றுவதே மனித குலத்திற்கு அவசியமாகும். எனவே நீதி நூல்களின் வழியில் தொடர்ந்து; அறநெறியோடு விருந்திடுவது பற்றி ஆசாரக்கோவை வெளிப்படுத்துகிறது.

வீட்டில் நடக்கும் திருமண நிகழ்ச்சி, அகவைநாள் சிறப்பு விழாக்களஇ; கடவுளர்களுக்குரிய நாள் விழா இவற்றில் எந்தநிகழ்வாக இருப்பினும் பிறருக்கு உணவளிப்பதைச் செய்வதற்குரிய பெரிய விருந்தாக எண்ணி உணவளிக்க வேண்டும்.

"கல்யாணம் தேவர் பிதிர்விழா வேள்விஎன்று
ஐவகை நாளும் இகழாது அறம்செய்க
பெய்க விருந்து ணவுபேறு".

- ஆசாரக்கோவை,பா.எண்.143

விருந்தினருக்கு அன்போடு உணவு அளிப்பதே சிறப்பான செயலாகும். ஆனால் தற்காலத்தில் விருந்தினரை உபசரிக்கும் மரபே அற்றுப் போய்விட்டது எனலாம். ஏனெனில் குடும்பத்தில் உள்ள இருவரும் பணிக்குச் செல்வதாலும் தங்களைப் பிறர் தொல்லை செய்யக் கூடாது என்றும் நினைக்கிறார்கள். மாந்தர் பலர் தன் வீடு தன் பெண்டு என்று குறுகிய மனம் படைத்தவர்களாக வாழ்கிறார்கள். இதனை பாரதிதாசன் தனது குடும்ப விளக்கிலஇ;

"தன் பெண்டு, தன் பிள்ளை, சோறு, வீடு,
சம்;பாத்தியம் இவையுண்டு தானுண்டேன்போன்
சின்னதொரு கடுகு போல் உள்ளங் கொண்டோன்"
- குடும்ப விளக்கு

ஆகவே பொதுவுடைமைச் சிந்தையுடன் வாழ்ந்து குடும்பம், நாடு, உற்றார் உறவினர் ஆகியோர் மேன்மையடையும் வகையில் நம்முடைய செயல்பாடானது திகழ வேண்டும்.

திறப்பட்டாரின் செயல்கள்

துன்பத்தையும் இன்பத்தையும் சமமாக ஏற்றுக்கௌ;ளும் மனநிலை அனைவருக்கும் இருக்கவேண்டிய முக்கியமான; பண்பாகும். தனக்கு நேரிடும் துன்பமான காலத்தில் கலங்கித் தவிக்காமலும் இன்பமான காலத்தில் பண்போடு வாழ்கின்ற நற்பண்பிலும் அன்பற்ற மாந்தர்களின் இல்லத்திற்குச் செல்லாமல் இருப்பதும் ஆகிய இம்மூன்று குணங்களும் மாந்தர்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டிய குணங்களாக ஆசாரக்கோவை விளம்புகிறது. இக்கருத்தினையே நாலடியார் என்ற பதினெண் கீழ்க்கணக்கு நூலும் வலியுறுத்திக் கூறுகிறது.

நிறைவுரை

நாம் இன்றைய அவசர உலகினில் அடிப்படையான செயல்களைச் செய்யாமல் விட்டுவிடுகிறோம். ஆகையினால் வாழ்வினில் அநேக மாற்றங்கள் நேரிட்டு வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிடுகிறது.எனவே, குறைந்த அளவிலாவது பிறரிடத்தில் அன்போடு நடந்துகொள்ளுதல், பண்பில் உறுதியாய் நிற்பது ஆகியவையே சிறந்த அறமாகும். இதனை **"அன்பின் வழியது உயிர்நிலை"** என்று சான்றோர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும், நீதிநெறி தவறாது அறத்தின் அடிப்படையில் வாழ்வைக் கட்டமைப்பபோதே வெற்றி நம்மை நாடி வரும்.

துணைநூற் பட்டியல்

1. ஆசாரக்கோவை-இரா.பஞ்சவர்ணம்.செந்தமிழ் பதிப்பகம்; வில்லிவாக்கம், சென்னை-14;

2. பாரதியார் கவிதைகள்- டி.வி. எஸ். மணி,வானவில் பதிப்பகம்; சென்னை 35.
3. திருக்குறள்- வ.சுப.மாணிக்கனார் மாணிக்க வாசகர் பதிப்பகம் சென்னை.18, நான்காம் பதிப்பு- 2006.
4. ஆசாரக்கோவை- இரா.பஞ்சவர்ணம். செந்தமிழ் பதிப்பகம்; வில்லிவாக்கம், சென்னை.
5. ஔவையார் பாடல் - பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம், வானதி பதிப்பகம் சென்னை.
6. நாலடியார்- பேரா.சுந்தர சண்முகனார்,கௌரா பதிப்பகம்,சாரதா பதிப்பகம் சென்னை.
7. ஆசாரக்கோவை-இரா.பஞ்சவர்ணம் செந்தமிழ் பதிப்பகம் ஏப்ரல் வில்லிவாக்கம், சென்னை
8. கலித்தொகை- டாக்டர் மா. இராசமாணிக்கனார், பூம்புகார் பதிப்பகம்,2011. சென்னை.
9. ஆசாரக்கோவை- இரா.பஞ்சவர்ணம். செந்தமிழ் பதிப்பகம் வில்லிவாக்கம், சென்னை.
10. ஆசாரக்கோவை -இரா.பஞ்சவர்ணம். செந்தமிழ் பதிப்பகம் வில்லிவாக்கம், சென்னை.
11. ஔவையார் பாடல்கள்- பேராசிரியர் சு.ந. சொக்கலிங்கம்; வானதி பதிப்பகம்இ சென்னை.
12. நாலடியார்- ந.மு.வேங்கடசாமி நாட்டார், பூம்புகார் பதிப்பகம்,2011 சென்னை.
13. ஆசாரக்கோவை-.இரா.பஞ்சவர்ணம். செந்தமிழ் பதிப்பகம்;, சென்னை.
14. திருக்குறள் வ.சுப.மாணிக்கனார் மாணிக்க வாசகர் பதிப்பகம் சென்னை.18 நான்காம் பதிப்பு- 2006.
15. ஆசாரக்கோவை-இரா.பஞ்சவர்ணம். செந்தமிழ் பதிப்பகம்;, சென்னை
16. புறநானூறு- :எஸ்.கௌமாரீஸ்வரி, பூம்புகார் பதிப்பகம,; டிசம்பர் 2010.
17. ஆசாரக்கோவை. இரா.பஞ்சவர்ணம். செந்தமிழ் பதிப்பகம்;, சென்னை
18. திருக்குறள் வ.சுப.மாணிக்கனார் மாணிக்க வாசகர் பதிப்பகம் 4.சிங்கர் தெரு பாரிமுனை, சென்னை.18நான்காம் பதிப்பு- 2006.
19. குடும்ப விளக்கு-ஜெகதீசன்ராஜேந்திரன் செண்பகா, பதிப்பகம்:2010

20. கொன்றை வேந்தன்- ந.மு.வேங்கடசாமி நாட்டார கௌரா பதிப்பகம் சாரதா பதிப்பகம்; 2021.
21. குடும்ப விளக்கு-ஜெகதீசன் ராஜேந்திரன்,செண்பகா பதிப்பகம் சென்னை:2010